2021-ம் வருடம் ஜனவரி மாதம் 29-ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற நகரமன்ற சாதாரண கூட்டத்தின் நடவடிக்கைகளின் உண்மைநகல்:

முன்னிலை: திரு.த.சௌந்தரராஜன்.பி.ஏ.,
தனி அலுவலர், ஆம்பூர் நகராட்சி.

1. இந் நகராட்சியின் 2020-2021-ம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்டம் மற்றும் 2021-2022 ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு திட்டம் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.013/பி2/2019

தீர்மான எண்.1- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

2. இந் நகராட்சியில் 2020-21ம் ஆண்டு சிறப்பு சாலைகள் (SRP) திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட சிமெண்ட் சாலைகள் அமைத்தல் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்க வேண்டி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்கான விளம்பரக் கட்டணத் தொகை ரூ.1,29,990/-ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்தொன்பதாயிரத்து தொள்ளாயிரத்து தொன்னூறுமட்டும்) சென்னை எலிகண்ட் பப்ளிசிட்டிஸ் நிறுவனத்திற்கு செலுத்த அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி தொகையை வருவாய் நிதியிலிருந்து செலுத்தவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.1520/இ1/2020

தீர்மான எண்.2- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

3. எதிர்வரும் 2021 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு முன்னேற்பாடுகள் தொடர்பாக ஆம்பூர் தொகுதி சட்டமன்ற தொகுதிக்கான ஆம்பூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள வாக்குச்சாவடி மையங்களில் குறைந்தபட்ச அடிப்படை வசதிகளை ஏற்படுத்திதருமாறும், அவ்வாறு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தரப்பட வேண்டிய வாக்குச்சாவடி மையங்கள் குறித்த விவரங்களை மாவட்ட ஆட்சித்தலைவர், திருப்பத்தூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.எச்2/10463/2020 நாள் 12.01.2021-ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பட்டியலில் குறிப்பிட்டுள்ள ஆம்பூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள வாக்குச்சாவடி மையங்களில் குறைந்தபட்ச அடிப்படை வசதிகளை மேற்கொள்ளவும், அதற்காகும் மதிப்பீடு தொகை ரூ.2.00 இலட்சத்திற்கும் (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அங்கீகாரம் வழங்கலாம். மேற்குறிப்பிட்டுள்ள பணியை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந,க,எண்.75/இ1/2021

தீர்மான எண்.3- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

4. சட்ட மன்ற தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் தேர்தல் பணி (தேர்தல் பார்வையாளர், தேர்தல் அலுவலர்கள்) உயர் அலுவலர்கள் தங்க நேரிட வேண்டிய அவசியமாகிறது.இதன் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். எனவே,வி.ஏ.கரீம் சாலையில் நகராட்சிக்கு சொந்தமான விருந்தினர் மாளிகை கட்டிடத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சீரமைத்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், அதற்காகும் மதிப்பீடு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கும் (ரூபாய்.ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அங்கீகாரம் வழங்கலாம். மேற்குறிப்பிட்டுள்ள பணியை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந,க,எண்.122/இ1/2021

தீர்மான எண்.4- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

5. ஆம்பூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்குறிப்பிட்டுள்ள பகுதிகளில் நகராட்சி பராமரிப்பில் உள்ள பொது சுகாதார வளாகங்கள் பழுதடைந்துள்ளன.

| வ.எண். | பகுதியின் பெயர் |
|---|---|
| 1. | அழகாபுரி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அருகில் |
| 2. | கம்பிக்கொல்லை பூங்கா அருகில் |
| 3. | கம்பிக்கொல்லை பிரதான சாலை நியாய விலை கடை அருகில் |
| 4. | புதுமண்டி தெரு |
| 5. | துரைசாமி ராஜா தெரு |
| 6. | கஸ்பா.அ மெயின் ரோடு அரசு மேல் நிலைப்பள்ளி அருகில் |
| 7. | வி.ஏ.கரீம் சாலை |
| 8. | கஸ்பா.அ.சோமலாபுரம் ரோடு |

மேற்குறிப்பிட்டுள்ள பொது சுகாதார வளாகங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சீரமைத்து பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், அதற்காகும் மதிப்பீடு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கும் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அங்கீகாரம் வழங்கலாம். மேற்குறிப்பிட்டுள்ள பணிகளை வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந,க,எண்.1740/இ1/2020

தீர்மான எண்.5- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

6. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் மேல்நிலை நீர்தேக்க தொட்டி மற்றும் திறந்தவெளி கிணறுகள் மூலம் குடிநீர் விநியோகம் மேற்கெள்ளும் போது குடிநீர் பகிர்மான குழாய்களில் அழுத்தம் காரணமான வெடிப்புகள் ஏற்பட்டு குடிநீர் விநியோக பகிர்மான குழாய்களில் கசிவுகள் உண்டாகி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் மேற்கொள்வதில் பாதிப்பு எற்படுகின்றது. எனவே, பொதுமக்களுக்கு தடையின்றி குடிநீர் விநியோகம் மேற்கொள்ளும் பொருட்டு மேற்படி கசிவுகளை உடனுக்குடன் பழுதுநீக்கம் செய்யும் பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினத் தொகை ரூ 5.00 இலட்சத்திற்க்கு (ஐந்து இலட்சம் மட்டும்) அங்கிகாரம் கோரப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:** அங்கீகாரம் வழங்கலாம்.
மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தை குடிநீர் நிதியின் கீழ் மேற்க்கொள்ளவும் அங்கீகரிக்கலாம்.
ந.க.எண். 70/2021/இ2
தீர்மான எண்.6- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

7. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட சாமியார்மடம் பகுதியில் அமைந்துள்ள 32.75 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்தேக்க தொட்டியில் இருந்து விநியோகிக்கப்படும் குடிநீரில் அரசு உத்திரவின் படி Sodium Hypo chlorite Solution (Bleaching liquid) liquid concentration powder 4 to 6% (Grade -1) basis as per IS 11673-1992 – ஐ ஆறு மாத காலத்திற்க்கு வாங்கி உபயோகப்படுத்த ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ9.95 லட்சத்திற்க்கு அங்கீகாரம் கோரப்படுகிறது.
**அலுவலகக்குறிப்பு:**அங்கீகாரம் வழங்கலாம்.
மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தை குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.
**ந.க.எண்.71/2021/இ2**
தீர்மான எண்.7- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

8. இந்நகராட்சிக்கு சொந்தமான ஆழ்துளை கிணறுகளில் உள்ள மினிபவர் பம்ப் நீரேற்று நிலையங்களில் உள்ள மற்றும் தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிகளில் உள்ள மின்மோட்டார் திறந்தவெளி கிணற்றில் உள்ள மின்மோட்டார்கள், ஆழ்துளை கிணறுகளில் உள்ள பவர் பம்ப் மோட்டார்கள், பொது கழிப்பிட கிணறுகளில் உள்ள மின்மோட்டார்கள், நகராட்சி பள்ளிகளில் உள்ள மின்மோட்டார்கள் என மொத்தம் உள்ள 343 மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து பராமரிப்பு பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினத் தொகை ரூ 5.00 இலட்சத்திற்க்கு அங்கிகாரம் கோரப்படுகின்றது.
**அலுவலகக்குறிப்பு:** 41.அங்கீகாரம் வழங்கலாம்.
2.மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தை குடிநீர் நிதியின் கீழ் மேற்க்கொள்ளவும் அங்கீகரிக்கலாம்.
3.குடிநீர் விநியோக பணியின் அவசியத்தை கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியமைக்கு அங்கிகாரம் வழங்கலாம்.
**ந.க.எண்.93/2021/இ2**
தீர்மான எண்.8- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

9. இந்நகராட்சியில் கீழ்கண்ட பணிக்கு 01.12.2020-ஆம் தேதியன்று ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| பணயின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருமதி | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| இந்நகராட்சிக்கு சொந்தமான வி.எ.கரீம் ரோடு மற்றும் அழகாபுரி மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளில் மின் ஒயரிங் பணியினை மேற்கொண்டு புதியதாக 80W LED மின் விளக்குகள் பொருத்துதல் | 1.75 | 1.எஸ். அருணாசலம்<br><br>2. ஏ.வி. நாகராஜன் | 0.05% மதிப்பீட்டை விட குறைவு.<br><br>0.80% மதிப்பீட்டை விட அதிகம். |

<u>**அலுவலகக்குறிப்பு:**</u> மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு.எஸ்.அருணாசலம், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியினை அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 856/2020/இ2**

தீர்மான எண்.9- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

10. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 25 முதல் 36 வரையுள்ள பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் நகராட்சி பணியார்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. 2021-22 ஆம் ஆண்டு தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு தேவையான தெருவிளக்கு மின் உபகரணங்களை கற்பகம் சிறப்பு அங்காடி, வேலூரிலிருந்து வாங்கிக்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.5.00 லட்சத்திற்க்கு(ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**அங்கீகாரம் வழங்கலாம்.

மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தை வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண்.76/2021/இ2**

தீர்மான எண்.10- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

11. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பொருத்தப்பட்டுள்ள தெரு விளக்குகளை உரிய நேரத்தில் On and Off செய்யவும், தெருவிளக்குகளை பராமரிப்பு பணி மேற்கெள்வதில் உள்ள சிரமத்தினை சரிசெய்யவும், காலதாமதமின்றி On and Off செய்ய 52 எண்ணிக்கை தானியங்கி (On and Off Automatic Swatches) சுவிட்சுகள் வாங்கி பொருத்திடும் பணிக்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ 6.65 லட்சத்திற்க்கு (ஆறு இலட்சத்தி அறுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகின்றது.

<u>**அலுவலகக்குறிப்பு:**</u> அங்கீகாரம் வழங்கலாம். மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தை வருவாய்நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண்: 47/2021/இ2**

தீர்மான எண்.11- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

12. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட நதிசீலாபுரம் மருத்துவ நகர் பகுதியில் பொருத்தப்பட்டுள்ள மின்கம்பம் அங்குள்ள சிறு பாலத்தின் மத்தியில் அமைந்துள்ளது. இதனால் பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் இடையூராக உள்ளது. எனவே, மேற்படி பகுதியில் உள்ள மின்கம்பத்தினை மாற்றி அமைக்க மின் வாரியத்தை கோரியதில், மேற்படி மின் கம்பம் மாற்றி அமைக்க தொகை ரூ16,600/- ஐ செலுத்துமாறு தமிழ்நாடு மின்சார வாரிய பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி தொகையினை மின்சார வாரியத்திற்க்கு செலுத்த அங்கீகாரம் கோரப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு:-**அங்கீகரிக்கலாம். மேற்கண்ட செலவினத்தை நகராட்சி வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண்: 926/2020/இ2**

தீர்மான எண்.12- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

13. இந்நகராட்சியில் அலுவலக பயன்பாட்டில் உள்ள 23 கணினிகள், 10 லேசர் பிரிண்டர்கள், 2 Dot Matrix பிரிண்டர்கள், 10 ஸ்கேனர், 2 ஜெராக்ஸ் மிஷின், 3 Laptop, 10 KVA UPS - 2 எண்ணிக்கை, 20 பேட்டரி ஆகியவை உள்ளது. இவற்றில் நகராட்சி முதல் தளத்தில் உள்ள 10 KVA UPS பழுது எற்பட்டு சரிசெய்ய இயலாததால் மேற்படி 10 KVA UPS அகற்றவிட்டு புதியதாக பொருத்திட ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.8.75 இலட்சத்திற்கு (எட்டு இலட்சத்தி எழுபத்தி ஐந்தாயிரம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகின்றது.

**அலுவலகக்குறிப்பு:** அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி செலவினத்தை வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண்.992/2020/இ2**

தீர்மான எண்.13- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

14. இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட வாகனங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய சாலை வரி, பசுமை வரி, தகுதி சான்று கட்டணம் ஆகியவற்றை 2021-2022ஆம் ஆண்டு செலுத்த ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.2.00 லட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகின்றது.

| வ.எண் | வாகன எண் | பயன்பாட்டு விபரம் |
|---|---|---|
| 1. | TN83 Y9805 | அலுவலக ஈப்பு வாகனம் |
| 2. | TN23 BX3308 | அலுவலக ஈப்பு வாகனம் |
| 3. | TN23 W8626 | குடிநீர் லாரி |
| 4. | TN23 Y8707 | குடிநீர் டிராக்டர் |

**அலுவலக குறிப்பு:-**அங்கீகரிக்கலாம். வ.எண் 1 & 2-ல் உள்ள வாகனங்களுக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும், வ.எண் 3 & 4-ல் உள்ள வாகனங்களுக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.77/2021/இ2**

தீர்மான எண்.14- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

15. இந்நகராட்சியால் அரசுக்கு செலுத்தப்பட வேண்டிய வருமான வரி கணக்கு விபரத்தினை S.R. Accounting services, Vellore தணிக்கை நிறுவனத்தின் மூலமாக அறிக்கை தயார் செய்து அரசு இணையதளத்தில் பதிவேற்றம் செய்து அரசிற்க்கு தொகையினை செலுத்திய வகையில் வரப் பெற்றுள்ள பட்டியல் தொகை ரூ 34,000/-ஐ வி.ஆர். வாசுதேவன், S.R. Accounting services, Vellore அவர்களுக்கு வழங்க அங்கிகாரம் கோரப்படுகின்றது.

**அலுவலக குறிப்பு:** அங்கீகாரம் வழங்கலாம்.

மேற்படி தொகையினை வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண்:974/2020/பி2**

தீர்மான எண்.15- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

16. மத்திய சுங்க கலால் வரித்துறை வேலூர் அவர்களின் உத்திரவு O IN O NO.7/13(ST)நாள்:25-07-2013-ன் படி 01-06-2007 முதல் 31-03-2012 தேதி வரையிலான காலத்திற்க்கு இந்நகராட்சியின் சேவை வரி மற்றும் தண்டத் தொகையுடன் சேர்ந்து ரு.33,09364/-ஐ செலுத்த உத்திரவிடப்பட்டுள்ளது.இதில் தொகை ரு.10,66,034/-ஐ 27-02-2015 அன்று மத்திய கலால் சுங்க வரித் துறை வேலூர் உதவி ஆணையாளர் அவர்களால் பாரத வங்கியில் உள்ள நகராட்சி கணக்கிலிருந்து பறிமுதல் செய்யப்பட்டது. மேற்கண்ட தொகையில் மீதமுள்ள தொகையை பிடித்தம் செய்ததை எதிர்த்தும் இந்நகராட்சியால் சென்னை உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்தும். சேவை வரி மற்றும் கலால்வரி வழக்குகளில் பிரதிதிதி பெற்ற M/S.சுவாமி அசோசியேட்ஸ் சென்னை அவர்களிடம் வழக்கு ஒப்படைக்கப்பட்டது.மேற்கண்டவழக்கு தற்போது முடிவுற்று உள்ளது வழக்காடு கட்டணம் ரூ15,000/-ஐ (ருபாய் பதினைந்தாயிரம் மட்டும்) M/S.சுவாமி அசோசியேட்ஸ் சென்னை அவர்கள்களுக்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அ) அனுமதி வழங்கலாம்.

ஆ) மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிந்து செலவிடவும் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்:3234/2012/அ1

தீர்மான எண்.16- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

17. இந்நகராட்சியில் கணினி பிரிவின் மூலம் Railnet Connection பராமரிக்கப்பட்டு வருகிறது. 2021ம் வருடத்திற்கு Connection Charges Sri Balaji Internet & Cable TV, Ambur என்ற நிறுவனத்திற்கு Reneval தொகை வழங்க ஆகும் உத்தேச செலவினத் தொகை ரு.9,900/-க்கு (ருபாய்.ஒன்பதாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அனுமதிக்கலாம்.மேற்க்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ள அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண். 107/2021/இ2

தீர்மான எண்.17- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

18. இந்நகராட்சியில் பொறியியல் பிரிவின் மூலம் Online ல் டெண்டர் பதிவு செய்வதற்கும், பதிவிறக்கம் செய்வதற்கும் மூன்று Digital Signature Card தேவைப்படுகிறது. எனவே ஆணையாளர், நகராட்சி பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் ஆகியோருக்கு புதியதாக Digital Signature Card Gets Computer Accessories, Vellore நிறுவனம் மூலம் வாங்க ஆகும் உத்தேச செலவினத் தொகை ரு.12000/-க்கு (ருபாய் பன்னிரெண்டாயிரம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- அனுமதிக்கலாம்.மேற்க்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ள அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.1679/2020/இ2

தீர்மான எண்.18- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

19. ஆம்பூர் நகரம் வார்டு: A , பிளாக் எண்: 7, நகரளவு எண்கள்:8/2B2, 9/1 A மற்றும் வார்டு: A,பிளாக் எண்:8, நகரளவு எண்கள்:29/3-ல் 3.93 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் அளிக்க கோரி திரு.R.D.சரவணன், த/பெ.தேவராஜ் என்பவர் 15.12.2017-ல் கொடுத்துள்ள விண்ணப்பத்தின் பேரில் உரிய கூராய்வு மற்றும் ஸ்தல ஆய்வு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ), வேலூர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு, அவர்தம் உத்திரவு கடிதம் ந.க.எண். 2822/2017/வே.ம.3, நாள்:23.01.2018-ல் ம.வ./ந.ஊ.து.இ.(வே.ம) வரன்முறைப்படுத்துதல் எண்: 62 (R) / 2018 என எண்ணிட்டு கொள்கை அளவிலான ஒப்புதல் ( In principle Approval ) அளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), வேலூர் அவர்களால் கொள்கை அளவிலான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள உத்திரவில் கீழ்கண்ட விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1. | மனைப்பிரிவின் மொத்த பரப்பு | : | 3.93 ஏக்கர் (அ)171265.00ச.அடி |
| 2. | மொத்த மனைகள் | : | 101 |
| 3. | விற்கப்பட்ட மனைகள் எண்ணிக்கை | : | 1 |
| 4. | விற்கப்பட்ட மனையின் எண்கள் | : | 02 |
| 5. | விற்கப்பட்ட மனையின் பரப்பளவு | : | 1800.00 ச.அடி |
| 6. | விற்கப்படாத மனைகள் எண்ணிக்கை | : | 100 |
| 7. | விற்கப்படாத மனைகள் எண்கள் (மனைஎண்74உடன்75இணைக்கப்பட்டுள்ளது) | : | 1, 3–101 |
| 8. | விற்கப்படாத மனைகள் பரப்பளவு | : | 126575.00 ச.அடி |
| 9. | பூங்கா ( மனை எண்.1pt, 3-10 ) | : | 12804.00 ச.அடி |

அனுமதியற்ற இம்மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் அளித்துள்ள நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் அவர்களின் செயல்முறை உத்திரவில் குறிப்பிடப்பட்டுள்ளதின் அடிப்படையில் மனைப்பிரிவின் சாலை மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை இந்நகராட்சிக்கு மனுதாரர் செலவில் பதிவு செய்து தானமாக பெற மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மனைப்பிரிவின் சாலை மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை இந்நகராட்சிக்கு மனுதாரர் செலவில் பதிவு செய்து தானமாக பெற மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**( ந.க.எண்:059/2018/எப்1 )**

தீர்மான எண்.19- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

20. ஆம்பூர் நகரம் வார்டு: A , பிளாக் எண்:8, நகரளவு எண்கள்: 3/3, 3/4 மற்றும் 4/3-ல் 5.97 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் அளிக்க கோரி திரு.P.பரமேஸ்வரன் த/பெ.பொன்னகவுண்டர் என்பவர் 21.05.2018-ல் கொடுத்துள்ள விண்ணபத்தின் பேரில் உரிய கூராய்வு மற்றும் ஸ்தல ஆய்வு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), வேலூர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு, அவர்தம் உத்திரவு கடிதம் ந.க.எண். 3630/2018/வே.ம.3, நாள்:11.07.2018-ல் ம.வ./ந.ஊ.து.இ.(வே.ம) வரன்முறைப்படுத்துதல் எண்:1003(R)/2018 என எண்ணிட்டு கொள்கை அளவிலான ஒப்புதல் (In principle Approval ) அளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), வேலூர் அவர்களால் கொள்கை அளவிலான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள உத்திரவில் கீழ்கண்ட விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1. | மனைப்பிரிவின் மொத்த பரப்பு | : | 5.97 ஏக்கர் (அ)260053.20ச.அடி |
| 2. | மொத்த மனைகள் | : | 262 |
| 3. | விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : | 74 |
| 4. | விற்கப்பட்ட மனையின் எண்கள் | : | 1-7,9,10,14-17,20-27,33,35-44,46-52,61,72-84,86-94,132-140,142,143. |
| 5. | விற்கப்பட்ட மனைகளின் பரப்பளவு | : | 64961.00 ச.அடி |
| 6. | விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | : | 188 |
| 7. | விற்கப்படாத மனைகளின் எண்கள் | : | 8,11-13,18,28-32,34,45,53-60, 62,71,73,85,95-131,141,144-258 |
| 8. | விற்கப்படாத மனைகளின் பரப்பளவு | : | 124426.00 ச.அடி |
| 9. | பூங்கா (மனை எண்.259,260,261) | : | 14908.00 ச.அடி |

அனுமதியற்ற இம்மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் அளித்துள்ள நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ) , வேலூர் அவர்களின் செயல்முறை உத்திரவில் குறிப்பிடப்பட்டுள்ளதின் அடிப்படையில் மனைப்பிரிவின் சாலை மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை இந்நகராட்சிக்கு மனுதாரர் செலவில் பதிவு செய்து தானமாக பெற மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மனைப்பிரிவின் சாலை மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை இந்நகராட்சிக்கு மனுதாரர் செலவில் பதிவு செய்து தானமாக பெற மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**( ந.க.எண்:836/2018/எப்1 )**

தீர்மான எண்.20- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

21. ஆம்பூர் நகரம் வார்டு: B, பிளாக் எண்:4, நகரளவு எண்கள்:8/1-ல் 0.95 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் அளிக்க கோரி திரு.G.ரமேஷ் த/பெ.கெங்காதரன் என்பவர் 20.01.2018-ல் கொடுத்துள்ள விண்ணபத்தின் பேரில் உரிய கூராய்வு மற்றும் ஸ்தல ஆய்வு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு, அவர்தம் உத்திரவு கடிதம்

ந.க.எண்.2460/2018/வேம3, நாள்:13.05.2019-ல் ம.வ./ந.ஊ.து.இ.(வே.ம) வரன்முறைப்படுத்துதல் எண்:306(R)/2019 என எண்ணிட்டு கொள்கை அளவிலான ஒப்புதல் (In principle Approval ) அளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் அவர்களால் கொள்கை அளவிலான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள உத்திரவில் கீழ்கண்ட விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1. | மனைப்பிரிவின் மொத்த பரப்பு | : | 0.95 ஏக்கர் (அ)41382.00 ச.அடி |
| 2. | மொத்த மனைகள் | : | 37 |
| 3. | விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : | 06 |
| 4. | விற்கப்பட்ட மனைகளின் எண்கள் | : | 14,15,29-31,36. |
| 5. | விற்கப்பட்ட மனைகளின் பரப்பளவு | : | 5998.00 ச.அடி |
| 6. | விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | : | 31 |
| 7. | விற்கப்படாத மனைகளின் எண்கள் | : | 1-13,16-28,32-35,37 |
| 8. | விற்கப்படாத மனைகள் பரப்பளவு | : | 27601.00 ச.அடி |
| 9. | பூங்கா ( மனை எண்:10,27,28 ) | : | 2820.00 ச.அடி |

அனுமதியற்ற இம்மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் அளித்துள்ள நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், வேலூர் அவர்களின் செயல்முறை உத்திரவில் குறிப்பிடப்பட்டுள்ளதின் அடிப்படையில் மனைப்பிரிவின் சாலை மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை இந்நகராட்சிக்கு மனுதாரர் செலவில் பதிவு செய்து தானமாக பெற மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மனைப்பிரிவின் சாலை மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை இந்நகராட்சிக்கு மனுதாரர் செலவில் பதிவு செய்து தானமாக பெற மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**( ந.க.எண்:509/2019/எப்1 )**

தீர்மான எண்.21- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

22. ஆம்பூர் நகரம் வார்டு: A , பிளாக் எண்:3, நகரளவு எண் :24/1C -ல் 0.74 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் அளிக்க கோரி திரு.A.அகமத் அலி த/பெ.M.A.அப்துல்காதர் என்பவர் 07.03.2018-ல் கொடுத்துள்ள விண்ணப்பத்தின் பேரில் உரிய கூராய்வு மற்றும் ஸ்தல ஆய்வு நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), வேலூர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு, அவர் தம் உத்திரவு கடிதம் ந.க.எண்.1202/2018/வேம3, நாள்:31.05.2018-ல் ம.வ./ந.ஊ.து.இ.(வே.ம) வரன்முறைப்படுத்துதல் எண்:779(R)/2018 என எண்ணிட்டு கொள்கை அளவிலான ஒப்புதல் ( In principle Approval ) அளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), வேலூர் அவர்களால் கொள்கை அளவிலான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள உத்திரவில் கீழ்கண்ட விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1. | மனைப்பிரிவின் மொத்த பரப்பு | : | 0.74 ஏக்கர் (அ) 32234.40ச.அடி |
| 2. | மொத்த மனைகள் | : | 26 = 25 + 1 ( 7எ ) |
| 3. | விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : | 19 |
| 4. | விற்கப்பட்ட மனைகளின் எண்கள் | : | 1,2,5,7எ,8,10-16,18-23. |
| 5. | விற்கப்பட்ட மனைகளின் பரப்பளவு | : | 18990.75 ச.அடி |
| 6. | விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | : | 07 |
| 7. | விற்கப்படாத மனைகளின் எண்கள் | : | 3,4,6,9,17,24. |
| 8. | விற்கப்படாத மனைகளின் பரப்பளவு | : | 6242.00ச.அடி |
| 9. | பூங்கா (மனை எண்:25) | : | 712.00 ச.அடி |

அனுமதியற்ற இம்மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் அளித்துள்ள நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), வேலூர் அவர்களின் செயல்முறை உத்திரவில் குறிப்பிடப்பட்டுள்ளதின் அடிப்படையில் மனைப்பிரிவின் சாலை மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை இந்நகராட்சிக்கு மனுதாரர் செலவில் பதிவு செய்து தானமாக பெற மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மனைப்பிரிவின் சாலை மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை இந்நகராட்சிக்கு மனுதாரர் செலவில் பதிவு செய்து தானமாக பெற மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**( ந.க.எண்:673/2018/எப்1 )**

தீர்மான எண்.22: அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

23. ஆம்பூர் நகரம் வார்டு: A , பிளாக் எண்:4, நகரளவு எண்:20/3-ல் 1.37ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் அளிக்க கோரி திரு.A.அகமத் அலி த/பெ.M.A.அப்துல்காதர் என்பவர் 07.03.2018-ல் கொடுத்துள்ள விண்ணப்பத்தின் பேரில் உரிய கூராய்வு மற்றும் ஸ்தல ஆய்வு நகர் ஊரமைப்பு துணை இயக்குநா(பொ), வேலூர் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு, அவர்தம் உத்திரவு கடிதம் ந.க.எண்.1203/2018/வேம3,நாள்:31.05.2018-ல்ம.வ./ந.ஊ.து.இ.(வே.ம) வரன்முறைப்படுத்துதல் எண்:780(R)/2018 என எண்ணிட்டு கொள்கை அளவிலான ஒப்புதல் ( In principle Approval ) அளிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), வேலூர் அவர்களால் கொள்கை அளவிலான ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள உத்திரவில் கீழ்கண்ட விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1. | மனைப்பிரிவின் மொத்த பரப்பு | : | 1.37 ஏக்கர் (அ)59677.20ச.அடி |
| 2. | மொத்த மனைகள் | : | 48 |
| 3. | விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : | 06 |
| 4. | விற்கப்பட்ட மனைகளின் எண்கள் | : | 15,16,18,33,34,38. |
| 5. | விற்கப்பட்ட மனைகளின் பரப்பளவு | : | 5337.00ச.அடி |
| 6. | விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | : | 42 |
| 7. | விற்கப்படாத மனைகளின் எண்கள் | : | 1-14,17,19-32,35-37,39-42,45. |
| 8. | விற்கப்படாத மனைகளின் பரப்பளவு | : | 34110.00ச.அடி |
| 9. | பூங்கா(மனை எண்:43,44,46,47,48) | : | 3880.00 ச.அடி |

அனுமதியற்ற இம்மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் அளித்துள்ள நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ), வேலூர் அவர்களின் செயல்முறை உத்திரவில் குறிப்பிடப்பட்டுள்ளதின் அடிப்படையில் மனைப்பிரிவின் சாலை மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை இந்நகராட்சிக்கு மனுதாரர் செலவில் பதிவு செய்து தானமாக பெற மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மனைப்பிரிவின் சாலை மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை இந்நகராட்சிக்கு மனுதாரர் செலவில் பதிவு செய்து தானமாக பெற மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**( ந.க.எண்:674/2018/எப்1 )**

தீர்மான எண்.23- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

24. இந்நகராட்சியின் 2020-21 ஆம் ஆண்டு சொத்து வரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம் மற்றும் வரியில்லா இனங்களின் நிலுவை மற்றும் நடப்பு கேட்பு தொகையினை வசூல் செய்யும் பொருட்டு நிலுவை மற்றும் நடப்பு தொகையினை உடன் செலுத்த கோரி பொதுமக்கள் அதிகமாக கூடும் 10 இடங்களில் டிஜிட்டல் பேனர்கள் அமைத்து விளம்பரம் செய்யவும், அம்ருத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள குடிநீர் குழாய்களை வரண்முறைபடுத்தவும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொதுமக்களுக்கு விளம்பரம் செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ30,000/-க்கு அங்கீகாரம் கோரப்படுகின்றது. மேற்கண்ட வசூல் பணியின் அவசியத்தை கருதி, 21.12.2020-ஆம் தேதியன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ. எண்** | **நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி** | **விலைப்புள்ளி தொகை ரூ** | |
|---|---|---|---|
| | | (டிஜிடல் பேனர் ஒன்று பிரிண்டிங் செய்ய (6”X 3”)) | துண்டு பிரசுரங்கள் 1000 எண்ணிக்கை பிரிண்டிங் செய்ய |
| 1 | எஸ். சரவணன் சரவணா டிஜிடல் பிரிண்டிங் ஆம்பூர். | 850.00 | 500.00 |
| 2. | உமா கிராபிக்ஸ் & டிஜிடல் பிரிண்டிங், ஆம்பூர். | 900.00 | 550.00 |
| 3. | ஸ்ரீ சாரதா டிஜிடல் பேணர்ஸ் ஆம்பூர். | 950.00 | 580.00 |

**அலுவலக குறிப்பு:** 1.மேற்கண்ட பணிக்கு ஆகும் உத்தேச செலவின தொகைக்கு அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி பணியினை வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

2.மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு வரப்பெற்றுள்ள குறைவான விலைப் புள்ளியினை வழங்கியுள்ள திரு.சரவணன், சரவணா டிஜிடல் பிரிண்டிங் என்பவரது விலைப் புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

3.மேற்கண்ட பணிக்கு விலைப்புள்ளிகளின் கோரியமைக்கும், பணி உத்திரவு வழங்கியமைக்கும் அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண்: 1693/இ2/ 2020**

தீர்மான எண்.24- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

5. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட இனங்களில் வார்டு 1 முதல் 36 வார்டுகளில் கீழ்க்கண்ட கட்டிடங்களுக்கு 1920-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்ட விதிகளின்படி சொத்துவரியிலிருந்து விலக்ககளிக்கப்பட்டுள்ளது. (The Properties enlisted as above are exempted

from the assessment of property Tax as per the provision of section 86 of Tamil Nadu District Municipalities act 1920, and article 285 of Constitution of India) ஆனால் குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ்வினங்களை சொத்து வரி விலக்கு பதிவேட்டில் (Exemption Property Register) பதிந்து வரி விலக்காக (Exemption Property) கருதி அதற்குரிய வரிவிதிப்பு எண் ஏற்படுத்த மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

சொத்து வரி விலக்களிக்கப்பட வேண்டிய இனங்கள்

| வ.எண் | வார்டு எண் | குடிநீர் குழாய் விரி விதிப்பு எண் | வரி விதிப்புதாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | 14 | 023/014/00110 | அறக்கட்டளை கோதண்டராமசாமி கோவில் |
| 2 | 14 | 023/014/00188 | தர்மகர்த்தா, பெரிய ஆஞ்சநேயர் கோவில் |
| 3 | 15 | 033/015/00173 | செயலாளர். பெரியமசூதி |
| 4 | 22 | 033/022/00163 | செயலாளர், காதர்பேட் மசூதி |
| 5 | 24 | 033/024/00186 | செயலாளர், ஜலாலியா மதார்ஷா |
| 6 | 26 | 033/026/00173 | செயலாளர், மொகிதீன்புரா மசூதி |
| 7 | 34 | 033/034/00062 | தர்மகர்த்தா, சுந்தர விநாயகர் கோவில் |
| 8 | 23 | 033/023/00130 | ஆணையாளர் குடியிருப்பு, ஆம்பூர் நகராட்சி |
| 9 | 35 | 033/035/00472 | பொறியாளர், குடியிருப்பு, ஆம்பூர் நகராட்சி |

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம். மேலும், மேற்படி வரிவிலக்கு அளிக்கப்பட்ட கட்டிடங்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட குடிநீர் இணைப்புகளுக்கு உரிய குடிநீர் கட்டணம் வசூல் செய்யவும் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.** 1200/2020/**அ**1

தீர்மான எண்.25- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

26.இந் நகராட்சிக்கு 2020-2021-ம் ஆண்டு சிறப்பு சாலைகள் திட்டத்தின் கீழ், சிமெண்ட் சாலைகள் அமைத்தல் பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண்.**20557/2020/இ3**, நாள் **15.12.2020–**ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பேரில், சிமெண்ட் சாலைகள் அமைத்தல் பணிகளுக்கு 11.01.2021-ல் இரு உறை முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் ஒவ்வொரு சிப்பத்திற்கும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கியுள்ள ஒப்பந்ததாரர்களின் தொழில் நுட்ப தகுதியினை ஆய்வு செய்யப்பட்டு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் விலை வஒப்பந்தப் புள்ளிகளை (PRICE BID) 22.01.2021 -ம் தேதி அன்று திறப்பு செய்யப்பட்டது. தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்கள் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் கீழ்வருமாறு பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| சிப்பம் எண் | பணியின் விவரம் | ஒப்பந்தப் புள்ளி தொகை (ருபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரரின் பெயர் திருவாளர்கள். | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | அரசமர தெரு, சான்றோர்குப்பம் புது தெரு, ராஜீவ் காந்தி தெரு(பெத்லகேம்), பர்ணக்கார 4-வதுதெரு மற்றும் பாங்கிபாபுன் கொல்லை தெரு ஆகிய தெருக்களில் சிமெண்ட்தளம் அமைத்தல் | 75.00 | 1.கே.ஜி.தீனதயாளன்<br>2.எக்சல் என்ஜினியரிங், ஓர்க்ஸ்,ஜோலார்பேட்டை. | 4.98% மதிப்பீட்டை விட அதிகம்<br>5.80% மதிப்பீட்டை விட அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | வாத்திமனை 8-வது தெரு, 1-வது குறுக்கு தெரு மற்றும் 2-வது குறுக்கு தெரு, ஜட்ஜ்மனை 1,2,3,4 மற்றும் 5-வது தெரு ஆகிய தெருக்களில் சிமெண்ட்தளம் அமைத்தல் | 75.00 | 1.திருவாளர்கள்.எக்சல் என்ஜினியரிங், ஓர்க்ஸ், ஜோலார்பேட்டை.<br>2.கே.ஜி.தீனதயாளன் | 4.97% மதிப்பீட்டை விட அதிகம்<br>5.60% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்குறிப்பிட்டுள்ள சிப்பம் எண்.1மற்றும் 2ல் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டு தொகையை விட கூடுதலாக உள்ளதால், குறைந்த விலைவிகிதம் (NEGOTIATION) வழங்குமாறு கூடுதலில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.1520/2020/இ1 நாள்:22.01.2021 மூலம் தெரிவிக்கப்பட்டதில், தற்போது கட்டுமான பொருட்களின் விலை அதிகமாக உள்ளதாலும், வேலையினை செய்யும் பணியாட்களின் கூலித் தொகை அதிகமாக உள்ளதாலும், ஒப்பந்த விலை விகிதத்தை குறைத்து வழங்க இயலாதநிலை உள்ளது என சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரர்கள் தமது 25.01.2021-ம் தேதிய கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதை பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அ. 2020-2021-ம் ஆண்டு சிறப்பு சாலைகள் திட்டத்தின் கீழ், எடுத்துக் கொள்ளப்பட்ட சிப்பம் எண்.1மற்றும் 2-ல் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் அனைத்தும் மதிப்பீட்டிற்கு கூடுதலாக உள்ளது.மேற்படி பணிகள் திட்டப் பணிகளாக இருப்பதாலும், அரசு நிர்ணயித்துள்ள கால கெடுவிற்குள் பணிகளை முடிக்க வேண்டி இருப்பதாலும், அவசர அவசியத்தை கருத்தில் கொண்டும், நகராட்சி பொறியியல் நடைமுறை நூல் பக்கம்.9ல் 2.7.2ல் தெரிவித்துள்ளவாறு, மதிப்பீட்டிற்கு 5சதவீதம் வரை ஒப்பந்தப்புள்ளி கூடுதலாக இருந்தாலும், ஒப்புதல் வழங்கலாம் என குறிப்பிட்டுள்ள காரணத்தை கருத்தில் கொண்டு, மேற்குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு மதிப்பீட்டை விட கூடுதலில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்தங்களை அங்கீகரிக்கலாம்.

ஆ. மேற்படி திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை போக கூடுதலாக ஏற்படும் செலவினத் தொகையை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.1018/2017/இ1

தீர்மான எண்.26- அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

ஓம்/-த.சௌந்தரராஜன்
தனி அலுவலர்
ஆம்பூர் நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்
ஆம்பூர் நகராட்சி